*அன்பின் பங்குதாரர்களே,*

*சவால்கள் நிறைந்த மற்றும் வெகுமதிகளையும் வழங்கிய ஆண்டிற்கான எமது 16ஆவது ஒன்றிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையினூடாக உங்களுடன் எனது தகவலை, முழுமையான நிறைவு மற்றும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். வினைத்திறனை மீளமைத்தல், உத்வேகத்தை மீளக் கட்டியெழுப்பல் மற்றும் வியாபாரத்தை வளர்ச்சி மற்றும் மாற்றியமைப்பிற்கான அடுத்த கட்டத்தை நிலை நிறுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பை நாம் நிறைவேற்றியிருந்ததைத் தொடர்ந்து, மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டு குழுமத்தைப் பொறுத்தமட்டில் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.*

*சவாலுக்குட்படுத்திய போது, எமது நோக்கம் தொடர்பில் நாம் உறுதியாக திகழ்ந்ததுடன், எமது விழுமியங்களால் வழிநடத்தப்பட்டு, எமது பங்காளர்களுக்கு நீண்ட கால பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பின் அடிப்படையில் செயலாற்றியிருந்தோம். இக்காலப்பகுதியை அழுத்தத்துக்கு முகங்கொடுப்பதற்கான காலமாக மாத்திரம் நாம் பயன்படுத்தாமல், ஆழமான நிபுணத்துவம், நவீன தொழில்னுட்பம் மற்றும் வலுவூட்டப்பட்ட திறமை போன்றவற்றினூடாக எமது நிறுவனத்தை வலிமைப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியிருந்தோம். புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை மற்றும் தெளிவான வழிகாட்டலுடன், தடைகளை தகர்த்து, அவற்றுக்கு அப்பாற்பட்ட வாய்ப்புகளை வடிவமைத்து துரித வேகத்தில் நாம் முன்னேறியிருந்தோம்.*

***உலகளாவிய சவால்கள் மற்றும் உள்நாட்டு சந்தை போக்குகளை கையாளல்***

*மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட இக்காலப்பகுதி, படிப்படியாக ஸ்திரமடைந்து வரும் உலகளாவிய பொருளாதாரத்தைக் கொண்டிருந்த போதிலும், தொடர்ச்சியான புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மை, எரிசக்தி விலை ஏற்ற இறக்கம், உயர்ந்த நிதியளிப்புச் செலவுகள், காலநிலை சார்ந்த இடையூறுகள் மற்றும் மாறிவரும் வர்த்தக வடிவங்கள் ஆகியவற்றின் தாக்கங்களுக்கு உள்ளாகக்கூடியதாக இருந்தது. கப்பல் போக்குவரத்துப் பாதை இடையூறுகள் மற்றும் சரக்குக் கட்டண ஏற்ற இறக்கங்கள் ஆகியவை இறக்குமதியை நம்பியிருக்கும் பொருளாதாரங்களையும் உலகளவில் இணைக்கப்பட்ட தொழில்துறைகளையும் பாதித்ததால், விநியோகச் சங்கிலி நம்பகத்தன்மையும் ஒரு கவலைக்கிடமானதாக அமைந்திருந்தது.*

*தெற்காசியாவினுள், உள்நாட்டு நுகர்வு, உட்கட்டமைப்பு முதலீடு மற்றும் சேவைகள் துறையின் வழிகாட்டுதலுடன் வளர்ச்சி ஒப்பீட்டளவில் மீண்டெழும் திறன் கொண்டதாக இருந்தது. இருப்பினும், எரிசக்தி இறக்குமதி சார்ந்திருப்பு, நாணய மதிப்பு மாற்றங்கள், உணவுப் பணவீக்கம், காலநிலை பாதிப்பு மற்றும் சீரற்ற ஏற்றுமதித் தேவை ஆகியவற்றால் பிராந்தியம் தொடர்ந்து அழுத்தங்களை எதிர்கொண்டது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருள், மூலப்பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றின் தாக்கம் மற்றும் வெளிநாட்டு நாணய வருவாயிற்காக சுற்றுலாத்துறை, புலம்பெயர்ந்தோர் பண அனுப்பல்கள் மற்றும் ஏற்றுமதிகள் ஆகியவற்றில் அது கொண்டுள்ள தங்கியிருக்கும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, இந்த பிராந்திய இயக்கவியல் இலங்கைக்கு குறிப்பாகப் பொருத்தமானதாக இருந்தது.*

*மேம்பட்ட பெரும் பொருளாதார ஸ்திரத்தன்மை, குறைந்த பணவீக்கம், தளர்த்தப்பட்ட வட்டி விகிதங்கள், வலுவான சுற்றுலா வருகைகள், அதிகளவிலான புலம்பெயர்ந்தோர் பண அனுப்பல்கள் மற்றும் தனியார் துறைக்கான கடன் வழங்கலில் ஏற்பட்ட படிப்படியான புத்துயிர் ஆகியவற்றின் ஆதரவுடன், இலங்கை இவ்வருடத்தில் தனது மீட்புப் பயணத்தைத் தொடர்ந்தது. இருப்பினும், குடும்பங்களின் கொள்வனவுச் சக்தி, வரிவிதிப்பு, இறக்குமதிச் செலவுகள், காலநிலைத் தாக்கங்கள் மற்றும் பொதுத்துறை நிதி நெருக்கடிகள் ஆகியவை வணிக நடவடிக்கைகளில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தியதால், இந்த மீட்புப் பயணம் நிதானமானதாகவே இருந்தது. தித்வா புயலின் தாக்கம், காலநிலை சார்ந்த அதிர்வுகளுக்கு நாட்டின் பாதிப்புறும் தன்மையை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டியதுடன், விவசாயம், உள்கட்டமைப்பு, விநியோகச் சங்கிலி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களை சீர்குலைத்தது. அத்துடன் காலநிலை மீண்டெழும் திறன், வணிகத் தொடர்ச்சி மற்றும் தகவமைத்துக் கொள்ளக்கூடிய உட்கட்டமைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலுப்படுத்தியது.*

*தொழிற்துறையின் வினைத்திறன் கலப்புப் பெறுமதிகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, வலுவான சந்தைப் பொருத்தம், ஒழுங்குபடுத்தப்பட்ட செலவுக் கட்டமைப்புகள், மீண்டெழும் திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகள் மற்றும் மாறிவரும் வாடிக்கையாளர்*

மற்றும் தொழில்துறை இயக்கவியலுக்கு ஏற்பச் செயல்படும் தன்மை ஆகியவற்றைக் கொண்ட நிறுவனங்களுக்கு, இந்த இயக்கச் சூழல் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நல்வாய்ப்புகளை வழங்கியிருந்தது.

**நோக்கத்தில் உறுதியாக, துல்லியமான முன்னேற்றம்**

"கனவுகளுக்கும் அபிலாஷைகளுக்கும் வலுவூட்டல்" என்ற எமது நோக்கமும், எங்களது பங்குதாரர்களுக்கு "நம்பிக்கையான பங்காளராக" திகழ்வோம் என்ற எமது வர்த்தக நாம உறுதிமொழியும், எமது பயணத்தின் ஒவ்வொரு நகர்வையும் தொடர்ந்து வழிநடத்தி வருகின்றன. எங்களது மூலோபாய திசையை வரையறுப்பதிலும், வணிக முன்னுரிமைகளை சீரமைப்பதிலும் மற்றும் நாம் சேவையாற்றும் பங்குதாரர்களுடன் அர்த்தமுள்ள வகையில் இணைந்திருப்பதிலும் அவை எப்போதும் மையப்புள்ளியாக விளங்குகின்றன.

மாறிவரும் ஓர் இயக்கச் சூழலை நாம் கையாண்டதுடன், எமது மூன்று மூலோபாய அரண்களான பன்முகப்படுத்தல், தனித்துவப்படுத்துதல் மற்றும் கைகோர்த்தல் ஆகியவற்றின் வழிகாட்டலுடன், நீண்ட கால மதிப்பை உருவாக்கும் எமது அர்ப்பணிப்பில் நாம் உறுதியாக இருந்தோம். இந்த அரண்கள் நிறுவனம் முழுவதும் ஒன்பது மூலோபாய முன்னுரிமைகள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், அவை இந்த அறிக்கையிலுள்ள ‘‘நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மூலோபாயம்’’ என்ற பிரிவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில், எமது நிதி, மனித, அறிவுசார், சமூக மற்றும் உறவுமுறை, உற்பத்தி மற்றும் இயற்கை மூலதனங்கள் எங்களது மூலோபாய முன்னுரிமைகளுடன் மிகவும் ஒத்துப்போகும் நல்வாய்ப்புகளை நோக்கி வழிநடத்தப்படுவதை உறுதிசெய்து, மூலதனப் பயன்பாட்டில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் திட்டமிட்ட அணுகுமுறையை நாம் மேற்கொண்டோம். இது துல்லியமாக வளர்ச்சியை முன்னெடுக்கவும், நிறுவன ரீதியான திறனை வலுப்படுத்தவும், எமது பங்குதாரர்களுக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட மற்றும் நிலையான முறையில் மதிப்பை வழங்கவும் வழிவகுத்தது.

**ஒருங்கிணைந்த சிந்தனை, துல்லியமான பெறுமதி உருவாக்கம்**

நோக்கம், மூலோபாயம், மூலதன ஒதுக்கீடு, செயல்திறன் மற்றும் அறிக்கைப்படுத்தல் ஆகியவை ஒரு தெளிவான பெறுமதி உருவாக்க சிந்தனைப் போக்கின் மூலம் ஒன்றிணைக்கப்படும் எமது வர்த்தகத்தின் ஒருங்கிணைந்த சிந்தனைக்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். எமது மூலோபாயம், எமது நோக்கம் மற்றும் வர்த்தக நாம வாக்குறுதியை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், எமது விழுமியங்களால் வழிநடத்தப்பட்டு, பங்குதாரர்களின் நீண்ட கால நலன்களுடன் அது சீரமைக்கப்படுவதையும் உறுதி செய்கிறது.

இந்த அணுகுமுறையின் மையமாக ஒருங்கிணைந்த சிந்தனை திகழ்கிறது. எமது நீண்ட கால மற்றும் வருடாந்த திட்டமிடல் செயல்முறைகளின் ஒரு பகுதியாக, ஆறு மூலதனங்களையும் அவற்றின் வழங்குநர்களையும் நாம் அடையாளம் காண்கிறோம். இது, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால பெறுமதி உருவாக்கத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், வர்த்தகங்கள் முழுவதும் துல்லியமாக மூலதனத்தை ஒதுக்கீடு செய்ய வழிவகுக்கிறது.

இதனை செயற்படுத்தும் வகையில், மூலோபாயம், ஆளுகை, இடர், நிலைபேறாண்மை, வினைத்திறன் கண்காணிப்பு மற்றும் எமது பெறுமதி சங்கிலித் தொடரில் பங்காளர் ஈடுபாடு ஆகியவற்றுக்காக, அர்ப்பணிக்கப்பட்ட அணிகள், கட்டமைப்புகள் மற்றும் பொறுப்புக்கூரலுடனான செயற்பாடுகளை நாம் நிறுவியுள்ளோம். இந்த பொறிமுறைகள், ஒருங்கிணைந்த சிந்தனையை, நோக்கத்துடனான வள ஒதுக்கீடாகவும், ஒழுங்குபடுத்தப்பட்ட தீர்மானம் எடுத்தலாகவும், மீண்டெழும் திறன் கொண்ட செயலாக்கமாகவும் மாற்றுகின்றன. இது, சவாலான காலப்பகுதிகளில் எமது மூலதனங்கள் தேய்மானமடைவதைத் தணிப்பதுடன், அவற்றைப் பாதுகாக்கவும், வளர்த்தெடுக்கவும், மேம்படுத்தவும் எமக்கு உதவுகின்றது.

இயற்கையையும் தேசத்தையும் முக்கியமான பங்குதாரர்களாக அங்கீகரிப்பதன் மூலம், எமது பங்குதாரர் அணுகுமுறையானது வழக்கமான எல்லைகளுக்கு அப்பால் விரிவடைகிறது. இவர்களது நல்வாழ்வானது, எமது வணிகத்தின் நிலைபேறான தன்மை மற்றும் நாம் உருவாக்கிச் செல்லும் மரபு ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த செயல்திறனானது, செயலாக்கத்தை மூலோபாயத்துடன் சீரமைப்பதன் மூலமும், பொருத்தமான குறிகாட்டிகளுக்கு எதிராக முன்னேற்றத்தை அளவிடுவதன் மூலமும், நிதிசார் விளைவுகளுக்கும் பரந்த பங்குதாரர் பெறுமதிக்கும் இடையிலான தடைகளை உடைப்பதன் மூலமும் இந்த சிந்தனைப் போக்கிற்கு உயிர் கொடுக்கிறது. வருட இறுதியில், இந்த செயல்திறன் ஒருங்கிணைந்த அறிக்கைப்படுத்தலாக மாற்றமடைந்து, எமது மூலதனங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தினோம், பாதுகாத்தோம் மற்றும் மேம்படுத்தினோம் என்பது குறித்த ஒரு நம்பகமான மற்றும் வெளிப்படையான விபரத்தை வழங்குகிறது.

ஒருங்கிணைந்த சிந்தனையும் ஒருங்கிணைந்த செயல்திறனும் உண்மையான பெறுமதி உருவாக்கத்திற்கு அடிப்படையானவை என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதேவேளையில், ஒருங்கிணைந்த அறிக்கைப்படுத்தல், இந்தச் செயல்முறையை முன்னோக்கிச் செலுத்துகின்ற பொறுப்புக்கூறல், ஒழுங்குமுறை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்துகிறது.

**புதுப்பிக்கப்பட்ட வளர்ச்சியை நோக்கி தடைகளை தகர்த்து முன்னேறல்**

ஊக்கமளிக்கும், அதேநேரம் மட்டுப்படுத்தப்பட்ட மீட்புக்கான அறிகுறிகளைக் காட்டிய ஓர் உள்ளூர் பொருளாதாரப் பின்னணியில் இவ்வருடம் ஆரம்பித்தது. முந்தைய ஆண்டில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, கட்டுமானத் துறை நடவடிக்கைகளின் படிப்படியான புத்துயிர், வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான அதிகரித்து வரும் ஆர்வம் மற்றும் விவசாயத் துறையில் எச்சரிக்கையுடன் மேம்பட்டு வரும் வாய்ப்புகள் ஆகியவை இணைந்து, இந்த நிதியாண்டின் தொடக்கத்தில் ஒரு புதிய வேகத்தை வழங்கின. இவ்வருடத்தில் எட்டப்பட்ட செயல்திறனானது, குழுமம் முழுவதிலுமுள்ள எமது குழுக்களின் மூலோபாய சீரமைப்பு, மீண்டெழும் திறன் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கிறது.

**வாகனங்கள்**

குழுமத்தின் திருப்புமுனைக்கு வாகனப் பிரிவு மிக வலுவான பங்களிப்பை வழங்கியதுடன், ஒரு முக்கிய வளர்ச்சி உந்துசக்தியாக தனது நிலையை அது மீண்டும் நிலைநிறுத்தியது. இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் வாகனத் துறைசார் நடவடிக்கைகள் மீட்சியடைந்த போதிலும், தீர்வைகள், நாணய மாற்று விகித அசைவுகள், நிதியளிப்புச் செலவுகள் மற்றும் கடன்-பெறுமதி தேவைகள் ஆகியவை வாங்குபவர்களின் கட்டுப்படியாகும் திறனில் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தின. அத்துடன், சந்தைப் பின்னணியும் கணிசமான அளவு பரிணாம வளர்ச்சியடைந்தது. குறிப்பாக, எரிபொருள் திறன்மிக்க, ஹைப்ரிட் மற்றும் வளர்ந்து வரும் மின்சார வாகனப் பிரிவுகளில், போட்டித்தன்மை வாய்ந்த விலையிலான தயாரிப்புகள் மூலம் புதிய சந்தைப் பிரவேசிகள் பரந்த கவனத்தைப் பெற்றனர்.

தீவிரமடைந்துள்ள இப்போட்டிப் பின்னணிக்கு மத்தியில், வாகனங்கள் பிரிவு வலுவான நிதிசார் வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன், குழுமத்தின் ஒட்டுமொத்த செயல்திறனுக்கும் கணிசமான பங்களிப்பை வழங்கியது. தெளிவான மூலோபாயக் கவனம், மாறிவரும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் குறித்த ஆழமான புரிதல், எங்களது முதன்மை வர்த்தக நாமங்களின் நம்பகத்தன்மை மற்றும் சந்தைத் தேவைக்கு ஏற்ற தயாரிப்பு வழங்கல்கள் ஆகியவையே இந்த வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமைந்தன. அத்துடன், சந்தையில் எம்மைத் தனித்துவப்படுத்தவும், வாடிக்கையாளர் நம்பிக்கையை வலுப்படுத்தவும், எமது போட்டித்திறன் மிக்க நிலையை மேலும் உறுதிப்படுத்தவும் தொடர்ந்து உதவிய DIMO இன் நம்பிக்கையான மற்றும் உறவுமுறையை அடிப்படையாகக் கொண்ட விற்பனைக்குப் பிந்தைய பராமரிப்பு அனுபவமும் இதற்குச் சமமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

புதிய வேகத்துடனும், சந்தைத் தடைகளை உடைப்பதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட மூலோபாயங்களுடனும், இப்பிரிவு 2026/27 ஆம் ஆண்டிற்குள் நம்பிக்கையுடனும் வளர்ச்சிக்கான தெளிவான பாதையுடனும் பிரவேசிக்கிறது.

**வாகன பொறியியல் தீர்வுகள்**

*அதிகரித்து வரும் போட்டித்தன்மை மிக்க மோட்டார் வாகனப் பின்னணியில், வாகன வணிகத்திற்கான ஒரு முக்கிய தனித்துவ காரணியாக விளங்குவதுடன், வாகன பொறியியல் தீர்வுகள் பிரிவு வாடிக்கையாளர்கள் மற்றும் முதன்மை நிறுவனங்கள் ஆகிய இருதரப்பினருக்கும் தொடர்ந்து நம்பிக்கையின் தூணாகத் திகழ்ந்தது. விற்பனைக்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகிய அதன் முதன்மைப் பங்கிற்கு அப்பால், குழுமத்தின் செயல்திறனுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் ஒன்றாக இப்பிரிவு தன்னை ஈடுபடுத்தியது.*

*வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நிலவிய காலப்பகுதியில், வாடிக்கையாளர்கள் தங்களது வாகனங்களைப் பராமரிப்பதற்கும், நம்பகத்தன்மை, தொடர்ச்சி மற்றும் செலவுத்திறன் ஆகியவற்றுடன் தங்களது செயல்பாடுகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கும் இப்பிரிவு ஒரு முக்கிய பங்கை வகித்தது. மதிப்பாய்வுக்கு உட்பட்ட இவ்வாண்டில் வாகனச் சந்தை மீட்சியடைந்ததைத் தொடர்ந்து, திறன் மேம்பாடு, வசதிகளைத் தரமுயர்த்துதல், தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் குழுக்களுக்கான இலக்கு சார்ந்த திறன்வளர்ப்பு ஆகியவற்றின் மூலம் புதிய தேவையை எதிர்கொள்வதற்கான தனது தயார்நிலையை இப்பிரிவு வலுப்படுத்தியது. இந்த முயற்சிகள், அதிகரித்து வரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஆதரவளிப்பதற்கும், மின்சார வாகனங்கள் உள்ளிட்ட வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு முகம்கொடுப்பதற்கும் இந்த வியாபாரத்தை சாதகமான நிலைப்படுத்தியுள்ளன.*

*கடல்சார் மற்றும் புகையிரத சார்ந்த வியாபாரங்கள், அவற்றுடன் தொடர்புடைய விற்பனைக்குப் பிந்தைய பராமரிப்புச் சேவைகளுடன் இணைந்து, இப்பிரிவின் செயல்திறனுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியதுடன், எமது பொறியியல் திறன்களின் பரந்துபட்ட தன்மையையும் மீண்டெழும் திறனையும் வெளிப்படுத்துவதாகவும் அமைந்தன.*

*கொழும்புக்கு மிக அருகில் இடமாற்றம் செய்தமை, அணுகல் வசதிகளை மேம்படுத்தியமை, தனது பாடநெறித் தொகுப்பை விரிவுபடுத்தியமை மற்றும் வெளிநாட்டுச் சான்றிதழ் வழங்கும் அமைப்புகளுடனான கூட்டுறவை அதிகரித்தமை ஆகியவற்றின் மூலம் கல்விப் பிரிவானது தனது மூலோபாய நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. தொழில்துறைக்கு ஏற்ற தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கான அதிகரித்து வரும் தேவையை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதற்கு இது இப்பிரிவை ஒரு சாதகமான நிலையில் பேணியுள்ளது.*

*முன்னோக்கிப் பார்க்கையில், வாடிக்கையாளர்களுடன் உறவுகளைக் கட்டியெழுப்புவதில் ஒரு முக்கிய காரணியாகவும், 2026/27 ஆம் ஆண்டில் நீண்ட கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும் ஒரு மூலோபாய உந்துசக்தியாகவும் மோட்டார் வாகன பொறியியல் தீர்வுகள் பிரிவை வலுப்படுத்துவதில் குழுமம் தொடர்ந்து உறுதியான கவனத்தைச் செலுத்தி வருகின்றது.*

**விவசாயம்**

*தேசிய விவசாய வளர்ச்சி ஒரு நிதானமான வேகத்தில் முன்னேறிய போதிலும், எங்களது விவசாயப் பிரிவு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க வருடாந்த முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது. இது, குழுமத்தின் பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சி நிரலில் தனக்கிருக்கும் மூலோபாய முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. காலநிலை மற்றும் வானிலை சார்ந்த இடையூறுகள், உள்ளிடுகைச் செலவு அழுத்தங்கள் மற்றும் பரந்த உலகளாவிய சூழ்நிலைகளால் ஏற்பட்ட விநியோகச் சங்கிலி கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும், விவசாய இயந்திரங்கள் பிரிவின் வலுவான செயல்திறன் இந்த வளர்ச்சிக்கு முதன்மையாக வழிவகுத்ததுடன், விவசாய உள்ளிடுகை பிரிவும் அதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியிருந்தது.*

*தீவிரமான போட்டித்தன்மை மிக்க ஒரு பின்னணியில், சந்தைப் பங்கை விரிவுபடுத்துவதற்கான ஒரு துல்லியமான அணுகுமுறையின் மூலம் விவசாய இயந்திரங்கள் பிரிவு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவுசெய்தது. விளைச்சல் மேம்பாடு, செலவுத்திறன் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளுக்கான சந்தைத் தேவைகளைப் பூர்த்தி செய்ததன் மூலம், விவசாய உள்ளிடுகை வியாபாரம் செயல்திறனுக்கு ஆதரவளித்தது. காலநிலை மாறுபாடுகள் மற்றும் வளக் கட்டுப்பாடுகளுக்கு தொழில்துறை முகம்கொடுத்து வரும் நிலையில், நம்பகமான உள்ளிடுகை, தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மற்றும் நம்பகமான ஆலோசனை ஆதரவு ஆகியவற்றிற்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*Agri Foods பிரிவு தனது வர்த்தக நாம ரீதியிலான பெறுமதி முன்மொழிவை முன்னெடுத்துச் சென்றதன் மூலம், உள்ளூர் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளில் Flava மற்றும் Miditer ஆகியவற்றின் சந்தை இருப்பை வலுப்படுத்தியது.*

இந்த முன்முயற்சிகளின் முழுமையான தாக்கம் காலப்போக்கில் முழுமையாக வெளிப்படும் என்ற போதிலும், தற்போது இடப்பட்டுள்ள அடித்தளங்கள் எதிர்கால வளர்ச்சிக்கான ஒரு வலுவான தளத்தை வழங்குகின்றன.

குழுமத்தின் நீண்ட கால பல்வகைப்படுத்தல் மூலோபாயத்தில் விவசாயத் துறை தொடர்ந்து பிரதானமாக திகழ்கிறது. 2026/27 ஆம் ஆண்டை முன்னோக்கிப் பார்க்கையில், எமது தொழில்துறையை தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட விவசாயத் தீர்வுகளை நோக்கி வழிநடத்தி, இப்பிரிவு தனக்கிருக்கும் வேகத்தை மேலும் வலுப்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

**வலுப் பொறியியல் மற்றும் தொழில்னுட்பத் தீர்வுகளை கட்டியெழுப்பல்**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நவீன உட்கட்டமைப்புத் தீர்வுகளை நோக்கிய உலகளாவிய மற்றும் உள்ளூர் ரீதியிலான வேகமான நகர்வினால் உந்தப்பட்டு, மின்பொறியியல் மற்றும் கட்டிடத் தொழில்நுட்பத் தீர்வுகள், தொழில்நுட்பம் சார்ந்த விரைவான மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றன. பரிணமித்து வரும் இச்சந்தைப் பின்னணியானது சந்தை வாய்ப்புகள், வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் இப்பிரிவின் எதிர்கால திசைவழி ஆகியவற்றைத் தொடர்ந்து மறுவடிவமைகின்றது.

*The Power Engineering and Building Technological Solutions segment delivered improved overall performance despite a marginal year-on-year revenue decline. Revenue was supported mainly by Lighting Solutions and Extra Low Voltage and Fire Solutions, while newly commissioned solar power plants contributed notably to profitability and future recurring income.* வருடாந்த வருமானத்தில் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சிக்கு மத்தியிலும், மின்பொறியியல் மற்றும் கட்டிடத் தொழில்நுட்பத் தீர்வுகள் பிரிவு மேம்பட்ட ஒட்டுமொத்த செயல்திறனை வெளிப்படுத்தியது. ஒளியமைப்புத் தீர்வுகள் மற்றும் மிகக் குறைந்த மின்னழுத்தம் மற்றும் தீயணைப்புத் தீர்வுகள் ஆகியன வருமானத்தில் முக்கிய பங்களிப்புச் செய்தன. அத்துடன், புதிதாக இயக்கப்பட்ட சூரிய மின்சக்தி நிலையங்கள் இலாபத்தன்மைக்கும் எதிர்காலத் தொடர்ச்சியான வருமானத்திற்கும் கணிசமாகப் பங்களிப்புச் செய்தன.

இவ்வாண்டில், மின்பொறியியல் பிரிவு ஆறு பிராந்தியங்களில் புதிதாக இயக்கப்பட்ட ஆறு சூரிய மின்சக்தி நிலையங்களின் பலன்களைப் பெறத் தொடங்கியதுடன், அவை தேசிய மின்விநியோகக் கட்டமைப்புக்கு கிட்டத்தட்ட 25 மெகாவாட் (MW) மின்சாரத்தைப் பங்களிப்புச் செய்தன. இத்திட்டங்கள் தொடர்ச்சியான வருமானத்தை உறுதி செய்ததுடன், தூய்மையான எரிசக்தியை நோக்கிய இலங்கையின் மாற்றத்திற்கும் ஆதரவளித்தன. வளர்ந்து வரும் மின்சார வாகன பயன்பாடு உள்கட்டமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இப்பிரிவு EV சார்ஜிங் அலகுகளை அறிமுகப்படுத்தியது. அத்துடன், குழுமத்தின் சொந்த வசதிகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சூரிய மின்சக்தியானது செயல்பாட்டு எரிசக்தி நுகர்வைக் குறைத்ததுடன், மேலதிக உற்பத்தித் திறன் தேசிய மின்விநியோகக் கட்டமைப்புக்கு வழங்கப்பட்டது.

ஒளியமைப்புத் தீர்வுகள் பிரிவு மற்றுமொரு கிரிக்கெட் மைதானத்தின் மின்னொளி அமைப்பிற்கான திட்டத்தை நிறைவுசெய்துள்ளதுடன், இது மேம்பட்ட ஒளியமைப்புத் தொழில்நுட்பம் மற்றும் விசேடத்துவமான செயலாக்கத் திறனில் DIMO இன் நிலையை மேலும் வலுப்படுத்துகிறது. கட்டிட முகாமைத்துவ அமைப்புகள், தீயணைப்பு மற்றும் ஒளியமைப்புத் தீர்வுகள் ஆகியவற்றின் ஊடாக நாட்டின் அடையாளச் சின்னங்களாகத் திகழும் முக்கிய கட்டுமானங்களுக்கு இப்பிரிவு வழங்கிய பங்களிப்பு, அதன் பரந்துபட்ட திறன்களை மேலும் உறுதி செய்துள்ளது.

2026/27 ஆம் ஆண்டை முன்னோக்கிப் பார்க்கையில், இப்பிரிவு தனது செயல்பாட்டுத் தளமெங்கும் வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான ஒரு சாதகமான நிலையில் உள்ளதுடன், தொழில்துறையின் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கும், குழுமத்தின் வளர்ச்சி மற்றும் நிலைபேறாண்மை இலக்குகளுக்கும் பங்களிப்பு செய்யும் வகையில் அமைந்துள்ளது.

**உட்கட்டமைப்பு பொறியியல்**

ஒரு மந்தமான செயல்திறன் கொண்ட காலப்பகுதிக்குப் பின்னர் உட்கட்டமைப்பு பொறியியல் பிரிவு, இவ்வாண்டில் பிரவேசித்தது. எனினும், இலங்கையின் கட்டுமானத்துறையில் ஏற்பட்ட படிப்படியான மீட்சியின் மூலம் அது பயன் பெற்றது. புதுப்பிக்கப்பட்ட உட்கட்டமைப்பு, பொதுப்பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் கட்டுமானம் சார்ந்த செயல்பாடுகளுக்கு மத்தியில், இப்பிரிவு தனது வேகத்தை மீண்டும் பெற்றுக்கொண்டது.

*முன்னேற்றமடைந்துவரும் உள்ளூர் தேவையினால் உந்தப்பட்டு, கட்டுமான இயந்திரங்கள் விற்பனை வியாபாரம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. பங்களாதேஷில் போட்டித்தன்மை மிக்க விலைமனுக்கோரல் செயல்முறை ஒன்றின் ஊடாகக் கொள்வனவு ஆணை ஒன்றைப் பெற்றுக்கொண்டமை, எங்களது பிராந்திய இருப்பை வலுப்படுத்தியது. அத்துடன், இலங்கைக்கும் அப்பால் தொழில்நுட்பத் திறன், முதன்மை நிறுவனங்களுடனான உறவுகள் மற்றும் சந்தை நுண்ணறிவு ஆகியவற்றைச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கான இப்பிரிவின் திறனைப் பிரதிபலிப்பதாகவும் இது அமைந்தது.*

*கட்டுமான இயந்திரங்கள் விற்பனைக்குப் பிந்தைய சேவையில், எமது நீண்டகால வாடிக்கையாளருடனான முழுமையான பராமரிப்பு ஒப்பந்தம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்ததுடன், எங்களது ஆயுள்வட்ட ஆதரவு மாதிரியையும், நம்பகத்தன்மை, உபகரணங்களின் தடங்கலற்ற செயல்பாட்டு நேரம் மற்றும் நம்பகமான சேவை ஆகியவற்றிற்கு வாடிக்கையாளர்கள் வழங்கும் மதிப்பையும் மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது.*

*யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் கழிகானியல் திட்டத்தின் ஊடாக, திரவ மற்றும் நீர்சார் தீர்வுகள் பிரிவு தனது செயல்பாட்டு வேகத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. நீர் பாதுகாப்பு, துப்புரவேற்பாடு, காலநிலை மீள்திறன் மற்றும் பொதுப்பயன்பாட்டுச் சேவை நவீனமயமாக்கல் ஆகியவற்றிலான தேசிய முன்னுரிமைகள் இப்பிரிவின் நீண்டகால எதிர்கால வாய்ப்புகளுக்கு வலுவூட்டுகின்றன.*

*முன்னோக்கிப் பார்க்கையில், ஒருமுகப்படுத்தப்பட்ட வளர்ச்சி உத்தி மற்றும் புவியியல் எல்லைகளுக்கு அப்பால் விரிவடைவதற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றுடன், குழுமத்தின் வளர்ச்சி நிகழ்ச்சி நிரலுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்கான ஒரு சாதகமான நிலையில் இப்பிரிவு தொடர்ந்து காணப்படுகிறது.*

**சுகாதாரப் பராமரிப்பு**

*சுகாதாரத் துறை இவ்வாண்டில் மிதமான வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், அது தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் வேகத்தை விடக் குறைவாகக் காணப்பட்டது. குறிப்பாக, அரசாங்கத்தின் சுகாதாரச் செலவினங்கள் மற்றும் கொள்முதல் நடைமுறைகள் இத்துறையினுள் வணிக மாற்றங்களின் வேகம் மற்றும் காலப்பகுதியில் தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி வந்தமையினால், சந்தை வாய்ப்புகள் தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டன.*

*இத்தகைய சவாலான செயல்பாட்டுச் சூழலுக்கு மத்தியிலும், சுகாதாரப் பிரிவு உறுதியான நிலையைத் தக்கவைத்துக் கொண்டதுடன், மூலதன உபகரணங்கள் மற்றும் மருந்தாக்கவியல் ஆகிய இரண்டு துறைகளிலும் ஒரு நிதானமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. கண் மருத்துவம் சார்ந்த தயாரிப்புகள் ஒட்டுமொத்த செயல்திறனுக்குச் சாதகமாகப் பங்களிப்பு செய்ததுடன், லென்ஸ் பிரிவில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் எதிர்கால வளர்ச்சிக்கான ஊக்கமளிக்கும் அறிகுறிகளை வழங்கியுள்ளன.*

*எவ்வாறாயினும், எமது மூலோபாய செயலாக்கத்தை மேலும் கூர்மைப்படுத்த வேண்டியதன் தேவையையும், வலுவான தேவை, மேம்பட்ட வருவாய் மற்றும் நீண்ட காலப் பொருத்தம் ஆகியவற்றை வழங்கக்கூடிய துறைகளை நோக்கி எமது திறன்களை வழிநடத்துவதன் அவசியத்தையும் உணர்ந்துள்ளோம். மருந்தாக்கவியல் மற்றும் நுகர்பொருட்களிலிருந்து, மேம்பட்ட மருத்துவத் தொழில்நுட்பம் மற்றும் மூலதன உபகரணங்கள் ஆகியவற்றை நோக்கிய இப்பிரிவின் படிப்படியான விரிவாக்கமானது, இலங்கையின் சுகாதாரத் துறையின் பரிணமித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பரந்த தளத்தை வழங்குகிறது.*

*2026/27 ஆம் ஆண்டிற்குள் நாம் கால்பதிக்கும் வேளையில், சுகாதாரப் பிரிவு மிகவும் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு வளர்ச்சி மூலோபாயத்துடன் புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கிறது. நிரூபிக்கப்பட்ட குறுகிய காலத் தேவையைக் கொண்டுள்ள துறைகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பதுடன், நீண்ட கால வளர்ச்சியை ஆதரிக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதிலும் நாம் கவனம் செலுத்துவோம். இந்த அணுகுமுறையின் மூலம், நாட்டின் சுகாதாரத் துறையின் முன்னேற்றத்திற்கும், குழுமத்தின் பரந்த பெறுமதி உருவாக்க நிகழ்ச்சி நிரலுக்கும் மிக அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.*

**சில்லறை வர்த்தகம்**

சில்லறை வர்த்தகப் பிரிவு, மேம்பட்ட பெரும் பொருளாதார உறுதித்தன்மை, தளர்த்தப்பட்ட கடன் நிலைமைகள் மற்றும் வாகன இறக்குமதிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை ஆகியவற்றின் ஆதரவுடன், படிப்படியாக மீண்டு வரும் ஒரு சந்தைச் சூழலில் இயங்கியது. எவ்வாறாயினும், வாங்குதிறன் அழுத்தங்கள், இறக்குமதிச் செலவுகள், வரிகள் மற்றும் நுகர்வோரின் எச்சரிக்கையான விருப்பார்ந்த செலவினங்கள் ஆகியவை வாகன உதிரிப்பாகங்கள், டயர்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் வலுச் சாதனங்கள் ஆகியவற்றிற்கான தேவையில் செல்வாக்குச் செலுத்தியதன் காரணமாக, இவ்வளர்ச்சி சீரற்றதாகவே காணப்பட்டது.

மேம்பட்ட சந்தை நிலைமைகளுக்கு மத்தியிலும், விலை உணர்திறன் மிக்க நுகர்வோர் நடத்தை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாங்குதிறன் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில், செயல்பாட்டுத் திறன் நிதானமானதாகவே காணப்பட்டது. மாற்றீடு செய்வதற்கான தேவை, வாகனப் பராமரிப்புத் தேவைகள் மற்றும் புத்துயிர் பெற்ற மோட்டார் வாகனச் செயல்பாடுகள் ஆகியவற்றின் ஆதரவுடன், வாகன உதிரிப்பாகங்கள் தொடர்ந்து முதன்மையான பங்களிப்பை வழங்குவதாக அமைந்திருந்தது. புதுப்பிக்கப்பட்ட கட்டுமானம், புனரமைப்பு, பணிமனை மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயல்பாடுகளினால் உந்தப்பட்டு, வலுச் சாதனங்கள் வியாபாரம் ஊக்கமளிக்கும் விற்பனை மேம்பாட்டைப் பதிவு செய்ததுடன், இது எதிர்கால வளர்ச்சி சாத்தியக்கூறுகளையும் வெளிப்படுத்தியது. எவ்வாறாயினும், விருப்பார்ந்த செலவினங்களில் நுகர்வோர் தொடர்ந்து காட்டிய எச்சரிக்கை உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில், தெரிவுசெய்யப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் ஏனைய தயாரிப்புத் தொகுப்புகள் எதிர்பார்ப்புகளுக்குக் குறைவாகவே காணப்பட்டன.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, தயாரிப்புத் தொகுப்பு சீரமைப்பு, இன்னும் கூர்மையான விநியோக வழித்தட மேலாண்மை, கையிருப்பு உகந்ததாக்கம் மற்றும் நடைமுறை மூலதனச் செயல்திறன் ஆகியவற்றின் ஊடாக வளர்ச்சியை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான ஒருமுகப்படுத்தப்பட்ட உத்தியுடன் இப்பிரிவு புதிய நிதியாண்டிற்குள் நுழைகிறது. இந்த முன்னுரிமைகள், எதிர்வரும் ஆண்டில் சில்லறை வர்த்தகப் பிரிவு தனது செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வலுவான முடிவுகளை வழங்குவதற்கும் சாதகமான ஒரு நிலையில் பேணியுள்ளன.

**செயற்பாட்டு மேன்மையை செம்மைப்படுத்தல்**

எமது 2025/26 ஆம் ஆண்டின் செயல்திறனைப் பார்க்கையில், எதிர்கால வளர்ச்சியானது மூலோபாய விரிவாக்கத்துடன் இணைந்து, இன்னும் செம்மையான செயல்பாட்டு ஒழுக்கத்தினால் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். இவ்வாண்டு எமது மீட்சி மற்றும் வளர்ச்சி முன்னுரிமைகளின் வலிமையை உறுதிப்படுத்தியதுடன், செயல்திறனைத் தொடர்ந்து தக்கவைப்பதற்கும் மீள்திறனைக் கட்டியெழுப்புவதற்கும் அதிக கவனம் தேவைப்படும் துறைகளையும் அது வெளிப்படுத்தியுள்ளது.

அதற்கமைய, 2026/27 ஆம் ஆண்டிற்கான எங்களது செயல்பாட்டு முன்னுரிமைகள் வலுவான பணப்பாய்ச்சல் முகாமைத்துவம், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனக் கட்டுப்பாடு, இலாப வரம்பு உகந்ததாக்கம், தயாரிப்புத் தொகுப்பு சீரமைப்பு மற்றும் மேம்பட்ட பகுப்பாய்வுகளின் ஊடாக மேம்படுத்தப்பட்ட செயல்திறன் கண்காணிப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்படும் வருமானம், மூலோபாய பொருத்தம் மற்றும் செயலாக்க முன்னேற்றம் ஆகியவை இன்னும் அதிக ஒழுங்குடன் மதிப்பாய்வு செய்யப்படுவதை உறுதிசெய்யும் வகையில், புதிய முயற்சிகள் மற்றும் முதலீடுகளை உன்னிப்பாகக் கண்காணிப்பதும் ஒரு முக்கிய கவனப்புள்ளியாக இருக்கும்.

தெரிவுசெய்யப்பட்ட வணிகங்களில் ஆரம்பிக்கப்பட்ட அமைப்புரீதியான மாற்றங்களைத் தொடர்ந்து நிறைவுசெய்வதுடன், இந்தச் செயல்பாட்டு மாதிரிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானங்களை உகந்ததாக்குவோம். இந்த முன்னுரிமைகளைச் செயலாக்கத்திற்குக் கொண்டு செல்வதற்காக, தெளிவான பொறுப்புக்கூறல் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகளுடன் இதற்கென அர்ப்பணிக்கப்பட்ட குழுக்களுக்கு அதிகாரமளிக்கப்படும்.

வலுவான செயல்பாட்டு ஒழுங்குமுறையின் ஊடாக, இந்த முன்னுரிமைகள் 2026/27 ஆம் ஆண்டில் மூலோபாய நோக்கத்தை இன்னும் சீரான மற்றும் நிலையான செயல்திறனாக மாற்றுவதற்குக் குழுமத்திற்கு ஆதரவளிக்கும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

***டிஜிட்டல் நிலைமாற்றம்: எதிர்கால வளர்ச்சிக்காக மையத்தினை வலுப்படுத்தல்***

*புதிய ERP தளத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கடந்த ஆண்டில் நிறுவப்பட்ட இதற்காக அர்ப்பணிக்கப்பட்ட குழுக்களினால் முன்னெடுக்கப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் முயற்சிகளுடன், டிஜிட்டல் நிலைமாற்றத்திற்கான எமது அணுகுமுறையானது இன்னும் முறையான மற்றும் மூலோபாயம் சார்ந்த ஒரு திசையை நோக்கி நகர்ந்துள்ளது. டிஜிட்டல் என்பது செயல்திறனை மேம்படுத்தும் ஒரு காரணியாக மாத்திரம் இனி நோக்கப்படாமல், முடிவெடுத்தலை வலுப்படுத்தும், பங்குதாரர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கிய திறனாகக் கருதப்படுகிறது.*

*எமது ICT மூலோபாயம் பல ஒருமுகப்படுத்தப்பட்ட முன்னுரிமைகளை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் மையத்தை வலுப்படுத்துதல், வாடிக்கையாளர் மற்றும் ஊழியர் அனுபவத்தை வளப்படுத்துதல், தானியக்கமயமாக்கல் மற்றும் AI ஆகியவற்றை மேம்படுத்துதல், உள்வாரி செயல்பாடுகளை மேம்படுத்துதல், நடைமுறைச் செயல்திறனை அதிகரித்தல், நிறுவனத் தரவுத் திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் அமைப்புகள் மற்றும் தரவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் ஆகியன அவையாகும். நீண்ட கால பின்பற்றல் மற்றும் பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில், இந்த முன்னுரிமைகள் படிப்படியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட முறையில் நிறுவனமயமாக்கப்பட்டு வருகின்றன.*

*இவ்வாண்டில், நாம் SAP ERP நடைமுறைப்படுத்தலின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்ததுடன், அது தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டமானது SAP Analytics Cloud ஐ அறிமுகப்படுத்துவதுடன், இது இன்னும் முறையான மற்றும் தானியக்கமாக்கப்பட்ட திட்டமிடல், கண்காணிப்பு, வணிக நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றுக்கு வழியமைக்கிறது. மேலும், செயல்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கவனமாக அடையாளம் காணப்பட்ட பல டிஜிட்டல் மேம்பாடுகளுடன், வாடிக்கையாளர்களைக் கையாளும் மற்றும் களப்பணி சார்ந்த மொபைல் அப்ளிகேஷன்களையும் இக்கட்டம் உள்ளடக்கியுள்ளது.*

*ERP கட்டமைப்பிற்கு அப்பாற்பட்டு, எமது அர்ப்பணிக்கப்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் குழு, செலவு குறைந்த மற்றும் AI மூலம் இயங்கும் தீர்வுகளைப் பயன்படுத்துவதுடன், முதன்மை அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்திருந்தது. இந்த முயற்சிகள், நடைமுறை வணிகத் தேவைகளை நிவர்த்தி செய்யவும், செயல்முறைகளின் பதிலளிப்புத் திறனை மேம்படுத்தவும், தரவு அடிப்படையிலான நுண்ணறிவுகளை வெளிக்கொணரவும் மற்றும் குழுமம் முழுவதும் நிலையான வாடிக்கையாளர் பெறுமதி முன்மொழிவுகளை வலுப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.*

*இந்த முயற்சிகளின் மூலம், உருவாகி வரும் டிஜிட்டல் சாத்தியக்கூறுகளைத் துல்லியமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய, நாம் செயல்படும் விதத்திலுள்ள பாரம்பரிய தடைகளை தகர்க்கக்கூடிய மற்றும் பங்குதாரர்களுக்கு இன்னும் அதிக பெறுமதியை உருவாக்கக்கூடிய, எதிர்காலத்திற்குச் சிறப்பாகத் தயாரான ஒரு நிறுவனத்திற்கான அடித்தளத்தை நாம் இடுகிறோம். பெருகிய முறையில் தொழில்நுட்பம் சார்ந்ததாக மாறிவரும் ஒரு வணிகச் சூழலில், மீள்திறனைக் கட்டியெழுப்பவும், உற்பத்தித்திறனை மேம்படுத்தவும் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் எமக்கு வழியமைக்கும் டிஜிட்டல் நிலைமாற்றம், எமது நீண்ட கால மூலோபாயத்தில் தொடர்ந்து மையமாகத் திகழ்கிறது.*

***எமது ஊழியர்கள், எமது போட்டிகர சாதக நிலை***

*எமது போட்டிச் சாதக நிலை, வாடிக்கையாளர்களுடனான ஒவ்வொரு தொடர்புகொள்ளலிலும் எமது பணியாளர்கள் வெளிப்படுத்தும் நிபுணத்துவம், தொழில்முறைமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள், முதன்மையாளர்கள் மற்றும் பங்காளர்களுடன் நாம் கட்டியெழுப்பும் நம்பிக்கைக்கும், நாம் வழங்க முயலும் சேவைத் தரத்திற்கும் அவர்களின் பங்களிப்பு மையமாக அமைகின்றது.*

*திறன் மேம்பாடு, அதிகாரமளித்தல், ஈடுபாடு மற்றும் குழுமத்தின் நோக்கம் மற்றும் நீண்ட கால உத்தியுடன் இணங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் மூலோபாயசார் மனித மூலதன முயற்சிகளின் ஊடாக, இந்தச் சாதகத்தை நாம் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறோம். எமது திட்டங்கள் கற்றல் மற்றும் வளர்ச்சி, உருவாகி*

வரும் சந்தைத் தேவைகளுக்கான திறன் மேம்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான கற்றல் கலாசாரமொன்றை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கின்றன.

இவ்வாண்டில், நம்பிக்கையான, திறமையான மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான குழுக்களை உருவாக்குவதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் மென்திறன்கள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, நிலைபேறாண்மை, இடர் முகாமைத்துவம், இணக்கப்பாட்டுத் தரநிலைகள் மற்றும் பிற முக்கிய துறைகளில் எமது கவனம் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஊழியரும் தாம் மதிக்கப்படுவதாக உணர்வதோடு, தமது சிறந்த செயல்திறனை வெளிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்களாகத் திகழும் வகையில், பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த ஒரு பணியிட கலாசாரத்தை வளர்ப்பதற்கும் நாம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

மனித மூலதன வளர்ச்சி என்பது, எமது நீண்டகால உருமாற்றத் திட்ட நிரலின் ஒரு முக்கிய அங்கமாகத் தொடர்ந்து திகழ்கிறது. நாம் முன்னோக்கி நகர்கையில், எமது பணியாளர்களில் தொடர்ந்து முதலீடு செய்வதுடன், தலைமைத்துவம் மற்றும் நிபுணத்துவத் திறன்களை வலுப்படுத்தி, குழுமத்தின் வளர்ச்சி, மீள்திறன் மற்றும் நீண்டகால பெறுமதி உருவாக்கம் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும் ஒரு துடிதாட்டமான பணியாளர் குழாமை நாம் கட்டியெழுப்புவோம்.

**செயல்நிலையில் நிலைபேறாண்மை நடவடிக்கைகள்**

எமது மூலோபாய முன்னுரிமைகளுக்கு அமைவாக, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை சார்ந்த அம்சங்களை எமது வணிக மாதிரியுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், நிலைபேறாண்மை திட்ட நிரலை நாம் தொடர்ந்து முன்னோக்கி நகர்த்தி வருகிறோம். எமது "நிலைபேறாண்மை திட்ட நிரல் 2030", பொறுப்பான நிதி வளர்ச்சியைப் பேணுவதுடன், மூன்று முக்கிய துறைகளில் எமது நீண்டகால நோக்கு மற்றும் இலக்குகளை வரையறுக்கிறது. நிலையான வணிகங்களை வளர்த்தெடுத்தல், ஊழியர்கள் மற்றும் சமூகத்தின் பங்களிப்பை வலுப்படுத்துதல், மற்றும் சுற்றுச்சூழலைப் பேணிப் பாதுகாத்தல் ஆகியன அவையாகும்.

இவ்வாண்டில், எமது முன்முயற்சிகள் பல தளங்களின் ஊடாக விழிப்புணர்வையும் செயல்பாட்டையும் தொடர்ந்து ஊக்குவித்ததுடன், நிலைபேறாண்மையை ஊழியர்களின் ஈடுபாடாக மாற்றியமைத்தன. DIMO Nature Club ஊடாக, ஊழியர்களிடையே சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு கல்வியை ஊக்குவித்ததுடன், இயற்கையைப் பற்றிய ஆழமான மதிப்பையும் பொறுப்பான பாதுகாவலர் பண்பையும் வளர்த்தெடுத்தோம்.

இந்த முயற்சிகள், சுற்றுச்சூழல் மற்றும் திறன் மேம்பாட்டுக் கல்வித் திட்டங்கள், அத்துடன் தாவரக் கன்றுகள் விநியோகிக்கும் முயற்சிகள் ஆகியவற்றின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகங்களுக்கும் மேலும் விரிவுபடுத்தப்பட்டன. மேலும், ஊழியர்கள் தங்களது உத்தியோகபூர்வ கடமைகளுக்கு அப்பால், சமூக சேவைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதை ஊக்குவிக்கும் எங்களது "Operation 8" தன்னார்வத் தொண்டு திட்டத்தின் ஊடாக, சமூகப் பொறுப்புணர்வுக் கலாசாரத்தை நாம் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறோம். நிலைபேறாண்மை என்பது கொள்கைகள், இலக்குகள் அல்லது அறிக்கைப்படுத்தும் கட்டமைப்புகளுக்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல; மாறாக, அது கலாசாரம், நடத்தை மற்றும் பகிரப்பட்ட பொறுப்புணர்வு ஆகியவற்றின் ஊடாக அன்றாட வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும் என்ற எமது நம்பிக்கையை இந்த முயற்சிகள் வெளிப்படுத்துகின்றன.

காலநிலை இடரின் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து, காலநிலை சார்ந்த சவால்களை அவசரத்தன்மையுடனும் நோக்கத்துடனும் கையாள்வதன் மூலம், ஒரு பொறுப்புள்ள கூட்டாண்மைக் குடிமகனாக எமது பங்கை நாம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். இவ்வாண்டின் அறிக்கை, எமது முதன்மையான ESG செயல்திறன் குறிகாட்டிகளையும், முன்னேற்றத்தையும் முன்வைக்கிறது. இது எமது வணிகம், பங்குதாரர்கள், சுற்றுச்சூழல் மற்றும் தேசத்திற்கு நீண்டகாலப் பெறுமதியை உருவாக்குவதற்கான எமது அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

**ஆளுகை, இடர் மற்றும் பொறுப்பு வாய்ந்த வழிநடத்தல்**

எமது நோக்கம் மற்றும் வர்த்தகநாம உறுதிமொழி ஆகியன, வலுவான ஆளுகை மற்றும் இடர் மற்றும் வாய்ப்பு முகாமைத்துவக் கட்டமைப்பினுள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இக்கட்டமைப்புகள் கூட்டாண்மை

ஆளுகை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்பு ஆளுகை மற்றும் இடர் ஆளுகை ஆகியவற்றை ஒன்றிணைப்பதுடன், எங்களது வணிகச் செயல்பாடுகள் தெளிவான கட்டமைப்பு, ஒழுங்குமுறை, பொறுப்புக்கூறல் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றுடன் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்கின்றன.

இவ்வாண்டில், உறுதியற்ற தன்மைகளை முன்கூட்டியே கையாள்வதற்கும், மூலோபாய ரீதியான தீர்மானம் எடுத்தலில் நிலைபேறாண்மை சார்ந்த அம்சங்களை ஒருங்கிணைப்பதற்கும் எமது இடர் மற்றும் வாய்ப்பு முகாமைத்துவ அமைப்புகளை நாம் மேலும் வலுப்படுத்தினோம். நிலைபேறாண்மை மற்றும் காலநிலை சார்ந்த இடர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதில் இடர்க் கொள்கையை மீளாய்வு செய்தல், இடர் ஆளுகையை வலுப்படுத்துதல், இடர்சார் பணிக்குழுவொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் இடர் முகாமைத்துவச் செயல்முறையைச் செம்மைப்படுத்துதல் ஆகியன உள்ளடங்கியிருந்தன.

எமது நீண்டகால வரலாற்றின் ஊடாகக் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை மற்றும் நேர்மையின் பாரம்பரியத்தைத் தொடர்ந்து முன்னோக்கி கொண்டு செல்வதுடன், ஆளுகை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் மிக உயர்ந்த தரநிலைகளைப் பேணுவதற்கும் நாம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

**உறுதிப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பிக்கை**

DIMO இல், எமது பங்குதாரர்களுக்கான ஒரு அடிப்படைப் பொறுப்பாக வெளிப்படைத்தன்மை தொடர்ந்து திகழ்கிறது. ஒழுக்கநெறி நடத்தை, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியவற்றின் மிக உயர்ந்த தரநிலைகளால் வழிநடத்தப்பட்டு, எங்களது கூட்டாண்மை அறிக்கைப்படுத்தலின் ஊடாக முன்வைக்கப்படும் தகவல்கள் நம்பகமானவை, சமநிலையானவை மற்றும் முழுமையானவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். இந்த ஒருங்கிணைந்த வருடாந்த அறிக்கை அந்த அர்ப்பணிப்பைப் பிரதிபலிப்பதுடன், எங்களது செயல்திறன், ஆளுகை, மூலோபாயம் மற்றும் பெறுமதி உருவாக்கப் பயணம் ஆகியவற்றைப் பற்றிய ஒரு தெளிவான மற்றும் நம்பகமான பதிவை வழங்குகிறது.

இந்த அணுகுமுறையின் ஊடாக, பங்குதாரர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், அறிக்கைப்படுத்தல் நேர்மையை நிலைநிறுத்தவும், ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனப் பாதுகாவலராக எங்கள் மீது வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தவும் நாங்கள் முயல்கிறோம்.

**துல்லியமாக முன்நோக்கி நகர்தல்: தடைகளை தகர்த்தல்**

நாம் 2026/27 நிதியாண்டிற்குள் காலடி எடுத்து வைக்கும் வேளையில், தெளிவு, ஒழுங்குமுறை மற்றும் துல்லியத்துடன் எங்களது மூலோபாய திட்ட வரைபடத்தை விரைவுபடுத்துவதில் எமது கவனம் அமைந்துள்ளது. எமது நோக்கம், வர்த்தகநாம உறுதிமொழி, மூலோபாய அரண்கள் மற்றும் மூலோபாய ரீதியான முன்னுரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில், சந்தை அபிவிருத்தியைச் செம்மைப்படுத்தவும், டிஜிட்டல் மயமாக்கலை முன்னோக்கி நகர்த்தவும், நிதி ஒழுக்கத்தை வலுப்படுத்தவும், திறமை மற்றும் கலாசார உருமாற்றத்தை சாத்தியமாக்கவும், அத்துடன் குழுமம் முழுவதும் புத்தாக்கங்களுக்கு ஆதரவளிக்கவும் எங்களது முதன்மைச் செயல்பாடுகளை நாம் மறுசீரமைத்து வருகிறோம்.

இவ்வாண்டில் நிலைபேறாண்மை, ஆளுகை, இடர் முகாமைத்துவம், டிஜிட்டல் நிலைமாற்றம் மற்றும் மூலதன உகந்ததாக்கல் ஆகியவற்றினூடாக நாம் கட்டியெழுப்பியுள்ள அடித்தளங்கள், நாம் முன்னோக்கி நகர்வதற்கான தளத்தை வழங்குகின்றன. ஒருங்கிணைந்த பாதுகாப்பு பண்பிற்கான எமது அர்ப்பணிப்பு, மூலோபாயம், மூலதன ஒதுக்கீடு, செயல்திறன் மற்றும் அறிக்கைப்படுத்தல் ஆகியன நீண்டகால பெறுமதி உருவாக்கத்துடன் தொடர்ந்து இணைந்திருப்பதை உறுதிசெய்கிறது. அத்துடன், எமது நிலைபேறாண்மை திட்ட நிரலும் வலுப்படுத்தப்பட்ட ஆளுகைக் கட்டமைப்புகளும் நாம் பொறுப்புடனும் மீள்திறனுடனும் வளர்ச்சியடைவதற்கு வழிகாட்டுகின்றன.

*அர்ப்பணிப்புள்ள குழுக்கள், வலுவான தரவு அடிப்படையிலான தெளிவு மற்றும் எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு பணியாளர் குழாம் ஆகியவற்றுடன், மூலோபாயமான செயல்பாடாகவும், செயல்பாட்டை அளவிடக்கூடிய விளைவுகளாகவும் மாற்றுவதற்கு நாம் சிறந்த முறையில் தயாராகியுள்ளோம். நாம் எதிர்காலத்தை நோக்குகையில், துல்லியத்துடன் முன்னோக்கி நகரவும், செயல்திறன் மற்றும் உருமாற்றத்தில் உள்ள தடைகளைத் தகர்க்கவும், எமது பங்குதாரர்கள், சுற்றுச்சூழல் மற்றும் தேசத்திற்கு நிலையான பெறுமதியை உருவாக்கவும் தயாரான நிலையில், மிகுந்த நம்பிக்கையுடனும் புதுப்பிக்கப்பட்ட உறுதியுடனும் அதனைச் செய்கிறோம்.*

***மனமார்ந்த பாராட்டுகள்***

*பணிப்பாளர் சபை மற்றும் தலைமைத்துவக் குழுவின் சார்பில், எங்களது ஊழியர்கள், விநியோகஸ்தர்கள், வர்த்தகப் பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் நாம் சேவையாற்றும் சமூகங்கள் உள்ளிட்ட எங்களது பங்குதாரர்கள் அனைவருக்கும், இவ்வருடம் முழுவதும் அவர்கள் வழங்கிய நம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவிற்காக எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*எமது பயணத்தின் மீதான உங்களது நம்பிக்கை எமக்கு ஒரு பலமாக அமைந்திருப்பதுடன், அதிக தெளிவு, நோக்கம் மற்றும் உறுதியுடன் முன்னோக்கிச் செல்வதற்கும் எம்மை ஊக்குவிக்கிறது. எமது மாற்றத்தின் அடுத்த கட்டத்தினுள் நாம் காலடி பதிக்கும் வேளையில், எமது கவனம் வெறும் முன்னேற்றத்தைத் தக்கவைத்துக் கொள்வதில் மாத்திரமல்லாமல், துல்லியமான வேகத்துடன் அதனை துரிதப்படுத்துவதிலும் உள்ளது. தடைகளை உடைத்தல், உள்ளடக்கிய வளர்ச்சியை வலுப்படுத்துதல் மற்றும் எங்களது அனைத்து பங்குதாரர்களுக்கும் நிலையான நீண்ட கால மதிப்பை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கி இந்தப் பயணம் அமைந்துள்ளது.*

*தங்கள் நம்பிக்கைக்குரிய,*

*ஏ ஜி பண்டிதகே*
*முகாமைத்துவ பணிப்பாளர் / குழும பிரதம நிறைவேற்று அதிகாரி*
3 ஜுன் 2026